143

for 10th failed.
page 1.

சுருக்கம்

வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டத்தினை பள்ளியிறுதித் தேர்வில் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களுக்கும் நீட்டித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்2) துறை

அரசாணை (நிலை) எண். 215

நாள்: 25.10.2010.
ஐப்பசி 8,
திருவள்ளுவர் ஆண்டு 2041.

படிக்க

1. அரசாணை (நிலை) எண்.72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (ஆர்2) துறை நாள் 25.8.2006.
2. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரின் கடிதம் எண். வே.உ.1/27700/2009, நாள் 25.1.10, 11.5.10 மற்றும் 1.9.10.

---

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தும் எவ்வித வேலைவாய்ப்பும் பெற்றிடாத வேலைவாய்ப்பற்றோருக்கு வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பள்ளியிறுதி வகுப்பினில் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களும், தங்களின் கல்வித் தகுதியினை உயர்த்திக்கொள்ளவும், வேலைவாய்ப்பினைப் பெறும் திறன்களை வளர்த்துக் கொள்ளவும் உதவிடும் வகையில் மேற்காணும் வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகைத் திட்டத்தை பள்ளியிறுதித் தேர்ச்சி பெறாத பதிவுதாரர்களுக்கும் நீட்டித்து மாதம் ரூ.100/– உதவித் தொகை வழங்குவது குறித்த கருத்துரு மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையரிடமிருந்து பெற்று, அக்கருத்துருவை அரசு கவனமாக பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

3. வேலைவாய்ப்பற்றோர் உதவித் தொகை பெற தேவையான கல்வித் தகுதி மற்றும் மாதாந்திர உதவித் தொகை விவரம்

(i) கல்வித்தகுதி மற்றும் வழங்கப்பட வேண்டிய உதவித்தொகை:–

| கல்வித் தகுதி | பிரதி மாதம் வழங்கப்படும் உதவித்தொகை |
|---|---|
| வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித் தொகையை முறையாகப் பள்ளியில் 9–வது வகுப்பு தேர்ச்சி பெற்று பின்னர் 10–ம் வகுப்பில் தவறியவர்களாக இருத்தல் வேண்டும். | ரூ.100/–<br>(ரூபாய் நூறு மட்டும்) |

for 10th failed
page 2



(ii) உச்ச <u>வயதுவரம்பு மற்றும் உதவித்தொகை வழங்கப்படும் காலநேரம் :-</u>

தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினத்தவரைப் பொறுத்தமட்டில் 45 வயது வரையிலும், ஏனையோரை பொறுத்தமட்டில் 40 வயது வரையிலும் என்று உச்ச வயதுவரம்பினை நிர்ணயிப்பதுடன் 3 ஆண்டுகளுக்கு உதவித் தொகையினை மொத்தத்தில் வழங்கப்படும்.

(iii)<u>பயனாளி உயிர்பதிவேட்டில் பதிவு செய்து காத்திருக்க வேண்டிய காலநேரம் :-</u>

பதிவுதாரர், தமது பள்ளியிறுதித் தோல்விச் சான்றிதழை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து 5 ஆண்டுகள் நிறைவு பெற்றிருக்க வேண்டும்.

4.மேலும், மேற்காணும் உதவித்தொகையினை பெற கீழ்க்காணும் நிபந்தனைகளை பதிவுதாரர்கள் / பயனாளிகள் பூர்த்தி செய்ய வேண்டும்.

(அ) வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை, அதிகபட்சமாக 3 ஆண்டுகளுக்கு அல்லது பயனாளி பொதுப்பிரிவினராக இருந்தால் உச்ச வயதுவரம்பான 40–ஐ கடக்கும் வரையில் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பிரிவினராக இருந்தால் 45–ஐ கடக்கும் வரையில், இந்த இரண்டு நிகழ்வுகளில் எது காலத்தால் முந்தியதோ, அதுவரையில், வழங்கப்படும். மேலும், இனமறியப்படும் காலாண்டின் இறுதி நாளன்று மேற்குறிப்பிட்ட வயதுவரம்பை கடந்தவராக பயனாளி இருத்தல் கூடாது.

(ஆ) இந்த வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை, பயனாளியால் துவக்கப்பட்டு, பராமரிக்கப்படும் தேசியமயமாக்கப்பட்ட வங்கிச் சேமிப்புக் கணக்கில் ஒவ்வொரு காலாண்டும் பற்று வைக்கப்படும்.

(இ) அரசாணை (நிலை) எண்.72, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(ஆர்2)துறை, நாள் 25.08.2006–உடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழ் படிவத்தில், பயனாளிகள் தமது வருமானம் உள்ளிட்ட இதர அம்சங்கள் தொடர்பிலான ஒட்டு மொத்தச் சான்றிதழையும் தாம் இத்திட்டத்தின் கீழ் பயனாளியாக அனுமதிக்கப்படும்போது, வருவாய் துறையிலிருந்து பெற்று ஒருமுறை சமர்ப்பிக்க வேண்டும்.

(ஈ) உதவித்தொகையை தொடர்ந்து பெற இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டுகளின் துவக்கத்தில் தாம் பணியில் இல்லை என்பதை தெரிவிக்கும் "சுய உறுதிமொழியை" அளித்தல் வேண்டும்.

(உ) பயனாளிகள் உயிர்பதிவேட்டில் காத்திருக்க வேண்டிய ஐந்தாண்டு காலம், பயன்பெற விண்ணப்பிக்கும் காலாண்டின் கடைசி நாளன்று கணக்கீடு செய்யப்படும். உதவித்தொகை அடுத்த காலாண்டு முதல் வழங்கப்படும்.

for 10th failed
page. 3.



(ஊ) பயனாளி முற்றிலுமாக வேலை இல்லாதவராக இருக்க வேண்டும். பயனாளி அரசுத் துறை அல்லது தனியார்துறை அல்லது எந்தவிதமான ஊதியம் பெறும் பணி அல்லது சுயதொழில் ஈடுபடுபவராக இருத்தல் கூடாது.

(எ) பயனாளியின் குடும்ப ஆண்டு வருமானம் ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மிகைப்படாது இருத்தல் வேண்டும்.

(ஏ) பயனாளி தமது பள்ளிக் கல்வியை முழுவதுமாக தமிழ்நாட்டில் முடித்திருக்க வேண்டும் அல்லது பெற்றோரில் ஒருவர் அல்லது பாதுகாவலர் அல்லது கணவன் அல்லது மனைவி குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் தமிழ்நாட்டிலேயே வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

(ஐ) பயனாளி அரசு அல்லது தனியார் ஆதாரங்களின் வாயிலாக எந்தவிதமான நிதி உதவித்தொகையும் பெறுபவராக இருத்தல் கூடாது.

(ஒ) பயனாளி அன்றாடம் கல்வி நிறுவனங்களுக்குச் சென்று பயிலும் மாணவ, மாணவியராக இருத்தல் கூடாது. இந்த நிபந்தனை தொலைத்தூரக் கல்வி அல்லது அஞ்சல் வழி கல்வி கற்கும் பயனாளிகளுக்குப் பொருந்தாது.

(ஓ) பயனாளி உதவித்தொகை பெறும் காலங்களில் கூட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவினைத் தொடர்ந்து புதுப்பித்து வருபவராக இருத்தல் வேண்டும்.

5. மேற்காணும் செலவினத்தை கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

<u>ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பயனாளிகளுக்கு ரூபாய் 4,80,00,000/– நிதி ஒதுக்கீடு செய்யும் கணக்குத் தலைப்பு :</u>

**2235** – சமூக பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் 789 ஆதி திராவிடருக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JD சிறப்புக் கூறுகள் திட்டத்தின் கீழ் வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2235 60 789 JD 0935).

(ஆ) <u>இதர வகை பயனாளிகளுக்கு வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான உதவித்தொகை (ரூபாய் 7,20,00,000/–) ஒதுக்கீடு செய்யும் கணக்குத் தலைப்பு:</u>

**2235** – சமூக பாதுகாப்பும் நலனும் – 60 ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் – 800 ஏனைய செலவுகள் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் – JA வேலை இல்லாத இளைஞர்களுக்கு நிவாரணம் வழங்குதல் – 09 உதவித் தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை (த.தொ.கு 2235 60 800 JA 0935).

for 10th failed
page 4.



6. மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் புதுத் துணைப் பணிகள் (New Instrument of Service) குறித்ததாகும். சட்டப் பேரவையில் ஒப்புதலைப் பெறும் வரையில் இத்திட்டத்திற்கான ஆரம்பச் செலவினம், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன் பணமாக பெற்று செலவிடப்படும். இதற்கான ஆணை நிதி (வரவு செலவு பொது I) துறையில் தனியாக வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து தேவைப்படும் முன் பணத் தொகையினை பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் இவ்வரசாணையின் இரு படிகளை இணைத்து நிதி (வரவு செலவு பொது I) துறைக்கு விண்ணப்பிக்குமாறு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

மேலும் இச்செலவினம் குறித்து சட்டப் பேரவையின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு, இவ்வாண்டின் துணை மதிப்பீட்டில் (Supplementary Estimates) சேர்த்திட, இப்பணிக்கான மொத்த நிதியொதுக்கீடு, இந்த நிதியாண்டில் பணிகளின் செயலாக்கத்திற்காக தேவைப்படும் செலவினம் ஆகிய விவரங்களை உள்ளடக்கிய விளக்கக் குறிப்பு ஒன்றினை உரிய நேரத்தில் நிதி (வரவு செலவு பொது I) துறைக்கு அனுப்புமாறு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண்.188/JS/PM/10 நாள் 20.10.2010 ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 1175 (ஆயிரத்து நூற்று எழுபத்து ஐந்து).

(ஆளுநரின் ஆணைப்படி)

த.பிரபாகர ராவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை கிண்டி,
சென்னை–600 032.
மாநிலக் கணக்காயர், சென்னை–18
மாநிலக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை– 35 (பெயரில்)
மாநிலக் கணக்காயர், சென்னை–9
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35
நிதி(தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் /வரவு செலவு பொது I / II) துறை,
சென்னை.9 (2 நகல்கள்)
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.